2018 ஜூலை 5]

கொள்கை கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கைதான். உரியவர்களை அழைத்துப் பேசி அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 274, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

274—

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கட்டடம்

***37894—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பழைய அலுவலகக் கட்டடத்திற்குப் பதிலாக புதிய அலுவலகக் கட்டடம் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடப்பாண்டில் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றியை சுவாசமாக்கி, கருணையை வசமாக்கி, தருமத்தை நேசமாக்கி வாழ்ந்த தருமத்தின் தலைமகன் புரட்சித் தலைவரை வணங்கி, வரம் வாங்கவே தவம் இருக்கும் காலத்தில், வரம் கொடுப்பதற்கே தவ வாழ்க்கை வாழ்ந்த மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

துரோகங்களை துரும்பாக்கி, எதிர்ப்புகளை அரணாக்கி, கழகத்தில் அல்லும் பகலும் அயராது உழைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஐயா அவர்களையும் வணங்குகிறேன்.

எனது கந்தர்வக்கோட்டை தொகுதியிலே உள்ள பழுதடைந்துள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தை நம்முடைய அரசு இந்த ஆண்டிலேயே சரி செய்து கொடுக்கும் எனச் சொல்லியிருக்கின்றது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதை இந்த ஆண்டிலே சரி செய்து கொடுக்க அரசு முன்வருமா என பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கான பணியை எடுக்கவிருந்தோம். அதற்குள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுத்த கோரிக்கைக்குப் போய்விட்டார். இந்த ஆண்டிலே கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கண்டிப்பாக எடுத்துக்கொள்ளப்படும். இதர கோரிக்கைகள் நிதிநிலைமைக்கேற்ப அடுத்த ஆண்டு பரிசீலனை

2018 ஜூலை 5]

செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடியில் இருக்கிற ஊராட்சி ஒன்றியத்தினுடைய கட்டடம், மிகப் பழமையான கட்டடம். தற்போது அந்தக் கட்டடம் மழை பெய்தால் ஒழுகுகின்ற நிலையில் இருக்கிறது. கட்டடம் இடியும் நிலையிலும் இருக்கிறது. அந்தக் கட்டடத்தைப் புதிய கட்டடமாக அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிய கட்டடம் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்படி, 10 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 30 கோடி ரூபாயிலே எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள ஒன்றியத்தில் இருக்கக்கூடிய அந்தக் கட்டடத்தை ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த ஆண்டில் அல்லது வருகின்ற ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதி, தளி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் நீண்டகாலமாக பழைய கட்டடத்தில் உள்ளது. அதேபோல, கெலமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்கூட பழைய கட்டடத்திலே இருக்கிறது. மாவட்டத்திலே இருக்கக்கூடிய அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. ஆனால், தளி மற்றும் கெலமங்கலம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களும் பழைய கட்டடத்திலேயே இருக்கக்கூடிய காரணத்தினால், மழைக் காலத்திலே உள்ளே தண்ணீர் இறங்கக்கூடிய காரணத்தினால் உடனடியாக அந்த இரண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களையும் புதிதாகக் கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே ஊரகப் பகுதிகளில் கடந்த ஏழு ஆண்டுகளில் 88 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 175.38 கோடி ரூபாயிலே கட்டப்பட்டிருக்கின்றன. வருடத்திற்கு 10 கட்டடங்கள் வீதம் எடுக்கப்படுகின்றன. இப்போதுகூட 30 கோடி ரூபாய்க்குக் கட்டப்பட உள்ளது. ஆகவே, வருகின்ற ஆண்டு துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

2018 ஜூலை 5]

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக வாய்ப்பு தந்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில்களைக் கூறுவதில் மிகுந்த வல்லவர். தெரிந்தும் தெரியாமலும், புரிந்தும் புரியாமலும், அறிந்தும் அறியாமலும் பதில் சொல்வார். . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அப்படி இல்லை. மாண்புமிகு அமைச்சர் தெளிவாகத்தான் பதில் சொல்கிறார். நீங்கள் கேள்வியைத் தெளிவாகக் கேளுங்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *இப்போது மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில், அதாவது 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் வாயிலாக ஒன்றியக் கட்டடங்கள் கட்டலாமென்று கிட்டத்தட்ட 20 பணிகள், உங்கள் துறையின் வாயிலாக வந்துள்ளன. 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 3 வகையான பணிகள் உள்ளன.* Skilled, semi–skilled, unskilled. Unskilled *என்பது உடலுழைப்பை மட்டுமே நாடி செய்கின்ற ஒரு வேலை. நான் கடந்த ஒரு மாதமாக என் தொகுதிக்குச் செல்லும்போதெல்லாம், பல தொகுதிகளில் எங்களுக்கு இப்போது குளத்து வேலையே இல்லையென்று சொல்கிறார்கள். நீங்கள் கொடுக்கின்ற அந்த 20 வேலைகளில்,* check dam *கட்டுதல், பஞ்சாயத்துக் கட்டடம், அங்கன்வாடி கட்டடம் கட்டுதல் ஆகியன எல்லாம்* semi–skilled *வேலை. அதற்கு* equipments *தேவைப்படுகின்றன. முக்கியமாக, இந்த வேலைக்காகப் பதிந்திருக்கிறவர்களில் 90 சதவிகிதம் பேர் பெண்கள். ஒப்பந்தக்காரர்களுக்கும், பெண்களுக்கும் சில பிரச்சினைகள் வருகின்றன. கார்டு தர மாட்டேன் என்று சொல்கின்ற பிரச்சினைகள் வருகின்றன. எத்தனை சதவிகித வேலை* semi–skilled? *எத்தனை சதவிகிதம் வேலை* unskilled? *உடலுழைப்பை நம்பியிருக்கிற பெண்களுக்காக எத்தனை சதவிகிதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது; அந்த ஒதுக்கீட்டினைத் தொடர்ந்து நீங்கள் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அது நல்ல கேள்வி. அத்தோடு விட்டு விடுங்கள். (குறுக்கீடு)*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *கடந்த காலத்திலே, தலைவர் கலைஞர் ஆட்சியில் இருக்கும்போது முழுக்க முழுக்க இந்த*

வேலை ஏழையெளிய பெண்களுக்காக, நீராதாரங்களுக்காகவே ஒதுக்கப்பட்ட semi–skilled–க்குரிய இந்த நிதி இன்றைக்கு skilled work–க்குப் போயிருக்கிறது. இது ஒரு நல்ல முன்னுதாரணம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதைப் பரிசீலிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்தும், தெரியாமலும், புரிந்தும், புரியாமலும் எப்படிப் பேசுகிறார் என்று தெரியவில்லை. அவர் அமைச்சராக இருந்தவர். சென்ற தடவை கேட்ட கேள்வியையும், இப்படித்தான் கேட்டார்கள். நீங்கள் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். மூலக் கேள்வி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்ததாகும். இப்போது நீங்கள் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தைப்பற்றி கேட்டிருக்கிறீர்கள். நீங்கள் அமைச்சராக இருந்தபோதும் மூலக் கேள்விக்குத் தொடர்பானவற்றிற்குத்தான் புள்ளிவிவரத்தைக் கொடுத்திருப்பீர்கள்.*

100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தளவில் மனித சக்தி நாட்கள் உருவாக்கியதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே பெரிய சாதனையை ஏற்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2001–2006 ஆட்சிக் காலத்தின் கடைசியில், 2005–2006–ல் தொடங்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த நீங்கள், ஐந்து ஆண்டு காலத்தில் எவ்வளவு மனித சக்தியை உருவாக்கியிருக்கிறீர்கள்? நான் இந்த இரண்டு ஆண்டுகளை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. அந்த ஐந்தாண்டுகளில் மட்டும் நாங்கள் எவ்வளவு மனித சக்தியை உருவாக்கியிருக்கிறோம் என்ற புள்ளிவிவரத்தை என்னுடைய துறை சார்ந்த மானியக் கோரிக்கையில் கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட, நீங்கள் கொடுத்ததை விட, மூன்று மடங்கு அதிகமாக நாங்கள் மனித சக்தியை உருவாக்கியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, இதில், நாம்தான் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக இருக்கின்றோம்.

2018 ஜூலை 5]

இந்த வருடம்கூட இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே பெண்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பினைக் கொடுப்பதிலும், நாம்தான் No.1. *அதுமட்டுமல்ல, நீங்கள் சொன்னதுபோல கட்டடங்கள் உருவாக்குவது, அங்கன்வாடிக் கட்டடம் கட்டுவது போன்ற பணிகளையெல்லாம் எடுத்துக்கொள்கிறோம். அதைப்போல எல்லாப் பணிகளையும் எடுக்கிறோம். இதில், ஒன்றியக் கட்டடப் பணிகளை நாம் இதுவரையிலும் எடுக்கவில்லை. நீங்கள் சொல்வது, கண்டிப்பாக துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படும். வாய்ப்பிருந்தால், கூடுதலாக எல்லா* buildings*–ம், உறுப்பினர் கேட்ட* buildings *உள்பட எடுத்துக்கொள்ளப்படும். அதுவும் துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்யப்படும். ஆனால், அசையா சொத்துகளை உருவாக்குவதை பார்த்ீர்களென்றால், கிட்டத்தட்ட 25 சதவிகிதம் மாநில அரசின் நிதி; 75 சதவிகிதம் மத்திய அரசின் நிதி. ஆகவே, அதில் நாம் நிறைய அசையா சொத்துகளை உருவாக்கியிருக்கிறோம். ஆனால், முக்கியமாக, வேலைவாய்ப்பை உருவாக்குவதற்குத்தான் அந்தத் திட்டத்தையே கொண்டு வந்தார்கள். அதற்குத்தான், நாம் முழுமையாக, அதிக வாய்ப்புக் கொடுக்கிறோம். இந்த முறை கிட்டத்தட்ட 2 இலட்சம்* check dams *கட்டுவது சம்பந்தமாக நாம் அறிவித்திருக்கிறோம். இப்போது, அந்தப் பணியை வருடந்தோறும் எடுத்துக் கொண்டிருக்கிறோம்; கிட்டத்தட்ட 40 ஆயிரம்* check dams *கட்டும் பணியை எடுத்திருக்கிறோம். (குறுக்கீடு)* PWD*–யினுடைய வாய்க்காலிலோ அல்லது உள்ளாட்சித் துறைக்கு சம்பந்தப்பட்ட வாய்க்காலிலோ* Check dams *கட்டலாம் என்றிருக்கிறோம். மேலும், தனி நபர் விவசாயிகளினுடைய பூமியில் செல்லக்கூடிய வாய்க்காலில் கூட* Check dams *கட்டக்கூடிய திட்டங்களையும் நாம் நிறைய எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கண்டிப்பாக, இதுகுறித்து வருங்காலத்தில் துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படும். (குறுக்கீடு) பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில் நாம்* No.1 *ஆக இருக்கிறோம். அதைப்போல,* daily wages *அதாவது கூலி கொடுப்பதில்கூட இந்தியாவிலேயே நாம்தான்* No.1 *ஆக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 275, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*